Registered No. M. 2530 SIDDHANTHAM
Vol. 41 — No. 7

13 JUL ... MADRAS

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே'

மலர் 41	கிலக ஆடி 1968 ஜுலை	இதழ்

உள்ளுறை

	பக்கம்
திருவாசகம்-சில பாடங்களின் விளக்கம் ...	18
திருக்கோட்டாறு ...	19
திருக்குறளில் இறையுண்மை ...	20
அப்பர் சுவாமிகள் ...	20
பிறசெய்திகள் ...	21

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4

சமாசச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 28—7—68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குச் சமாசச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டு விழா பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

(செயலாளர்)

பிற செய்திகள்

திருமுறை காவலர் அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் அளித்த பொருளுதவியால் ஏற்பட்ட சமாசக் கட்டிட டிரஸ்டின் ஆதரவில் நம் சமாசச் சார்பில் 11-6-68 செவ்வாய் மாலை 7 மணிக்குத் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் வித்துவான். குலசை. ப. இராமநாத பிள்ளை அவர்கள் 'சம்பந்தர்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

மேலும் ல் 30-6-68 ஞாயிறு மாலை 6 மணிக்குத் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் திரு. T. S. இராமலிங்கம் பிள்ளை எம். ஏ., பி. எல். (தமிழகச் சட்டத் துறைச் செயலாளர்) அவர்கள் தலைமையில் மாணிக்கவாசகர் திருநாளும் வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் இயற்றிய "திருமயிலைத் தேவாரத் திருப்பதிகமும் வாயிலார் நாயனார் புராணமும்" விளக்கவுரையுடன், என்னும் நூல் வெளியீடும் நிகழ்ந்தன.

சைவப் பெரியார் ச. சச்சிதாநந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., திரு. ராவ்சாகிப் நல். முருகேச முதலியார் பி.ஏ. திரு. கே. சிதம்பரம் பிள்ளை எம். ஏ., தமிழகச் சுகாதாரத் துறைத் துணைச்செயலாளர் முதலியோர் மாணிக்கவாசகர் பெருமை திருவாசகப்பெருமை திரு. வாண்டையார் அவர்கள் வெளியிட்ட நூற் பெருமைபற்றிப் பேசினர். திரு வாண்டையார் அவர்கள் மாணிக்கவாசகர் பற்றிப் பேசி நன்றி கூறினார். அம்பை சங்கரனார் நன்றி நவின்றார்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ௵ ஆடி 1968 ஜூலை	இதழ் 7

திருவாசகம் - சில பாடங்களின் விளக்கம்

—: (ஆசிரியர்) :—

திருவாசகத்தை மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருள, திருச்சிற்றம்பலமுடையார் தமது திருக்கையால் எழுதினார் என்று வரலாறு கூறுகிறது. அக்காலத்திலிருந்து அவர் எழுதிய சுவடியின் மூலம், சுவடிகள் பெருகின. தமிழ் நாட்டில் திருவாசகச் சுவடி ஒன்றுதான் மற்ற எல்லாச் சுவடிகளையும் விட எண்ணிக்கையில் மிகவும் அதிகம் என்று நாம் கருதுகிறோம். சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரையில், திருவாசகத்தை யாரும் அச்சிடவில்லை. 1837 இல் முதன் முதலாகத் தஞ்சை சரபோஜி மன்னன் ஆதரவில், பெரும் புலவராயிருந்த கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், பல ஏடுகளை வைத்து ஆராய்ந்து, அச்சில் பதிப்பித்தார். அவரே திருவாசகம் தோன்றிய வரலாறு என்ற பெயரில் 101 வரி கொண்ட ஓர் ஆசிரியப்பா பாடிச் சேர்த்தார். பின்வந்த பதிப்புக்களில் இவ்வகவலைச் சேர்த்து அச்சிட்டிருக்கவும் காணலாம். சிவக்கொழுந்து தேசிகர் பதிப்பு (1837) எங்கும் யாரும் இப்போது பார்த்ததில்லை.

அதற்கிணங்கப் பதிப்பித்த அனந்தையர் போன்றோர் பதிப்புக்களே உள்ளன. தேசிகருக்குப் பிறகு திருவாசகம் அச்சிட்ட யாரும் ஏட்டை வைத்து ஆராய்ந்தவர் இல்லை. ஆறுமுக நாவலர் கூட, முன்னிருந்த பதிப்பை அப்படியே அச்சிட்டாரேயன்றி ஏடு வைத்துப் பரிசோதிக்கவில்லை. ஆகவே, அவருடைய பதிப்பில் நாவலர் பரிசோதித்தது என்றிராமல் நாவலர் முன்னிலையில் பரிசோதித்த பதிப்பு என்று பெயர் அமைக்கப்பட்டிருக்கும்.

நீண்ட காலத்துக்குப் பின், அதாவது முதல் பதிப்பு வெளியாகி 120 வருடங்களுக்குப் பின், மர்ரே கம்பெனி இராஜம் அவர்கள் சிறந்த பண்டிதர்களை வைத்து நூலை ஆராய்ந்து பதிப்பித்தார். அவருடைய பதிப்புக்குப் பயன்பட்ட ஏடுகள் 77, பழைய பதிப்புப் புத்தகங்கள் 29. (இவற்றுள் எமது ஏட்டுப் பிரதிகள், அச்சுப் புத்தகங்கள் சிலவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.) இப்பதிப்பை ஒட்டியே பள்ளியகரம் தமிழ்ப் பேரறிஞர் நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் மிகச் சிறந்த முன்னுரை குறிப்புரையோடு அண்ணாமலைச் சர்வகலாசாலை வெளியீடாகப் பதிப்பித்தார்கள். இங்குச் சொல்லிய இவ்விரு பதிப்புக்களும் மிகச் சிறந்த நல்லியல்புகள் பல தம்மகத்தே கொண்டுள்ளன.

இங்கு நாம் இப்பதிப்புக்களின் சிறப்பை எடுத்துக் கூறவில்லை. எழுதுவோரால் நேர்ந்த பிழைகளைக் காட்டி, சைவ மக்கள் கொள்ள வேண்டிய, திருத்தமான பாடம் இது என்பதைப் பதிகந் தோறும் முறையாக எடுத்துக் காட்ட எண்ணுகிறோம். திருத்தமான பாடம் என்று சொன்ன மாத்திரத்தில் அநேகர் மூல பாடத்தை யாரோ மாற்றி விட்டார்கள் என்று அஞ்சுகிறார்கள். 'மாணிக்க வாசகருடைய சொல்லை ஏன் நீங்கள் திருத்துகிறீர்கள்?' என்று கேட்கிறார்கள். முதலாவதாக இங்கு இவர்களுடைய இந்த அச்சத்தைப் போக்க வேண்டியிருக்கிறது.

தொடக்கத்திலேயே, 'இப்பாடங்கள் யாருடைய திருத்தங்களுமல்ல. மூல ஏடுகளிலே கண்ட பாடம்' என்று தெளிவு படுத்த எண்ணுகிறோம். மர்ரே கம்பெனியார் வெளியீட்டுக்குப் பின் யாம் மிகப் பழைய ஏட்டுச் சுவடிகள் பத்துக்கு மேற்பட்டும் சேகரித்துப் புதிதாக ஆராய்ந்தோம். இப்பத்துட் சில மிக மிகப் பழையன. அவை எழுதி மூன்று ஆண்டுகளாவது இருக்கலாம். இவற்றுள் கண்ட கருத்துச் சிறப்புடைய பாடங்களைப் பார்த்த போது, இவற்றுட் சிறந்தனவற்றையும், மர்ரே பதிப்பிற் சிறந்தனவற்றையும் எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும். ஏற்றனவற்றை இனியேனும் அனைவரும் கொள்ள வேண்டும் என்ற எண்ணமுண்டாயிற்று. இதைப் பலருக்கும் தெரிவிக்க எண்ணியே இக்குறிப்புக்களை இங்கு எழுதுகிறோம்.

ஏடுகளில் படிப்பவராலும், எழுதுபவராலும், இவர்களுடைய கவனக் குறைவினாலும், கல்வித் தேர்ச்சிக் குறைவினாலும் பிழைகள் நேரிடும். இவை எவ்வாறு நேரிடுகின்றன என்பது மிகவும் சுவையுடைய ஒரு தனி ஆராய்ச்சி. அதற்கு இங்கு இடமில்லை. இங்கு நாம் சொல்ல விரும்புவது, இப்போது கிடைக்கின்ற ஏட்டுப் பிரதிகளைக் கூடிய வரையில் பார்த்து ஆராய்ந்து பாடங்களைச் செப்பம் செய்து கொள்ள வேண்டும் என்பதே. முதன் முதலாகப் பதிப்பித்தவர் ஓர் ஏட்டை அல்லது சில ஏடுகளைப் பார்த்தே பிரதி செய்து அச்சிட்டார். சில ஏடுகளே அவர் பார்த்திருக்கக் கூடும். பார்த்த ஏட்டில் பிழைகள் இருந்திருக்கக் கூடும். ஏட்டைப் படிப்பதில் பிழை நேரும்; பார்த்து எழுதியதில் பிழை இருக்கும்; அச்சில் பிழை நேர்ந்திருக்கும். காலம், சென்ற நூற்றாண்டின் முற்பகுதி என்பதை மறக்கக் கூடாது. அதன் பின் யாரும் ஏட்டைப் பார்த்து அதற்கு இயையத் திருவாசகப் பாடத்தை அமைத்துக் கொண்டதில்லை. நூறு வருடத்துக்கு மேலாகி (1837-1956) மர்ரே கம்பெனி – கந்தசாமிப் பிள்ளையவர்களின் பதிப்புக்களில்

மட்டுமே ஏடுகள் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. பரிசோதிப்பவர்களின் தகுதிக்கும் கவனத்துக்கும் ஏற்பத் திருத்தமான சில பாடங்கள் கிடைக்கின்றன. அச்சில் உள்ளதே வேதம் என்பதில்லை. முன்னோர் எழுதி வைத்ததே இந்த அச்சுக்கு ஆதாரமல்லவா? ஆதலால் பழமையான ஏடுகளின் ஆதாரம் எந்த நிலையிலும் நமக்கு உதவியாயிருக்கும் என்பது உறுதி. பொருளின் தெளிவுக்கும், சிறப்புக்கும் ஏடுகள் எந்த நிலையிலும் உதவி செய்யும்.

நாம் இங்கு பேசுவது திருவாசகத்தைத் திருத்தும் விஷயமல்ல; திருவாசக ஏடுகளில் காணப்படுகிற செம்மையான பாடத்தை மேற்கொள்வது என்பதை மீண்டும் அறிவுறுத்துகிறோம்.

இனி, ஒவ்வொரு பதிகத்திலும் உள்ள சிறப்பான பாடங்களைக் குறிப்பிட்டுச் செல்வோம்.

இங்கு ஒன்று சொல்வது ஒருவகையில் பொருத்தமுடையது. புதுச்சேரியில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் திருவாசகப் பதிப்பு ஒன்று சமாஜத்தில் வெளியிட வேண்டும் என்ற பேச்சு வந்த சமயம், காரைக்குடி முத்துப்பட்டணம் சொ. நாராயணன் செட்டியார் அவர்கள் ஓரளவு பண உதவி செய்வதாக வாக்களித்தார்கள். அப்போது சிறிது காலம் சமாஜம் இதுபற்றிக் கவலை கொள்ளாதிருந்தது. பின்னர், பலர் பலவிதமாகத் திருவாசகப் பதிப்பு வெளியிட்ட போதிலும் கூட, சமாஜத்தில் செம்மையான திருத்தமுடைய பதிப்பு வெளி வருவது அவசியமே என்று முடிவு செய்தது. அதன் மேல் வேலை தொடங்கி இப்போது நடந்து வருகிறது. இடையில் தாமதங்கள் பல குறுக்கிட்ட போதிலும், இப்போது விரைந்து முடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இச்சமாஜப் பதிப்பில் செம்மையான பாடங்கள் பல மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. மிகப் பழைய பதிப்புக்களையே படித்துப் பழகி உள்ளவர்களுக்கு, சில பாடங்

கள் புதியனவாய்த் தோன்றக் கூடும். ஆதலால் அவற்றை அறிமுகப்படுத்து முகமாக இக்கட்டுரை பயன்படும். இங்கு பொருள் கூறுவது எமது நோக்கமன்று. பொருள் கூறுவதில் ஏற்பட்ட பிழைகளை 'சித்தாந்தம்' கட்டுரைகளில் பல முறை எடுத்துக் காட்டி யிருக்கிறோம். திருத்தமான பாடம் இன்னதென்று காட்டுவதொன்றே எமது நோக்கம்.

1. சிவபுராணம் :- அடி 24: பழைய பாடம் 'எண் இறந்து.' புதிய பாடம் 'எண் நிறைந்து.' எல்லையிலாதானே என்று பின்னர் சொல்லுவதால் இங்கு எண் எல்லையை யிறந்து (கடந்து) என்று சொல்வதைவிட, முதல் வரியில் சொல்லியது போல விண்ணும் மண்ணும் நிறைந்து, பின்னர் எண்ணும் நிறைந்து என்று சொல்வது தொடர்பாக அமைகிறது. விண் நிறைந்து என்ற முன் வரியோடு, முழு எதுகை நயமும் கிடைக்கிறது. 'எண் நிறைந்த பெருங் கருணை' (1977) எனச் சேக்கிழார் சம்பந்தர் புராணத்தில் பாடுவதும் காண்க.

2. கீர்த்தித் திருவகவல் :- அடி 40 :

ப. ஆண்டா னெங்கோன் அருள் வழி இருப்ப

பு. ஆண்டா னங்கோர் அருள் வழி இருப்ப.

இங்கு மாற்றம் இரண்டெழுத்துக்களிலேயே; 'அங்கு ஓர்' என்பது அந்த நிலையைத் தெளிவாகச் சுட்டுகின்றது. எங் கோன் என்பதில் சுட்டுகின்ற நயம் இல்லை. வரி 50 :

ப. பொலிந்திருந்து, பு. பொலிந்தினிது :

அடி 52, 56 காண்க. எங்குமே இனிது என்றே உள்ளமை புலப்படும்.

3. திரு அண்டப்பகுதி :- அடி 173 :

ப. குரம்பை கொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய,

பு. குரம்பு கொண் டின்றேன் பாய்த்தினன் நிரம்பிய.

'சிறிய இல்லமாகக் கொண்டு இனிய தேனைப் பாய்ச்சி' என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. அதனினும் பார்க்க, 'சிறிய வரப்பு அமைத்து இனிய தேனைப் பாய்ச்சி னன்' என்ற புதிய பாடத்தில் வினை முடிவும் ஏற்படுகிறது. (குரம்பை—சிறு குடிலாகிய உடல்; குரம்பு-வரப்பு) பாய்த்தி னன் என்ற வினைமுற்று முன் பின் உள்ள வரிகளில் செய் தனன், ஏற்றினன், அமைத்தனன், ஆக்கினன் என்ற வினை முற்றுக்களோடு ஒருங்கிணைந்து பொருள் தருவது நயமாக உள்ளது.

4. போற்றித் திருவகவல் :- அடி 99 :

ப. ஆவா என்றனக் கருளாய்,

பு. ஆவா என்றெனக் கருளாய்.

திருவாசகம் முழுமையிலும் 'அ ஆ' என்ற ஒலியை அஞ் சேல் என்று பொருள்படும்படியாக ஆசிரியர் அதிகம் உப யோகிக்கிறார். இங்கு அதை விரிக்கில் பெருகும். ஆகவே அஞ்சேல் என்று எனக்கு அருளாய் என்பதே நேரானது. வரி 118 : ப. சுற்றம், பு. சுற்றமும், முற்றும்மையாக இருப் பதே சொல் நயமும், இசை நயமும் தருகிறது. அடி 132 :

ப. அழிவிலா வானந்தவாரி போற்றி,

பு. வழுவிலா வானந்த வாரிபோற்றி.

இறைவனாகிய ஆனந்த வாரி அழிவில்லாதது என்று சொல் வதினும், உயிர்களுக்கு வழுவாத (தவறாத) ஆனந்தம் அளிக்கவல்லது என்று கூறுவதே பொருட் சிறப்புடையது.

5. திருச்சதகம் :- பாடல் 26, அடி 3 :

ப. வந்தனை, பு. வந்தெனை.

நீ வந்தாய் என்று சொல்வதினும், வந்து என்னை (ஆட் கொண்டாய்) என்று கூறுவது, பொருட் சிறப்புடையதா யிருக்கிறது. பாடல் 32, அடி 1—2.

ப. மேல்நெறி, பு. மெய்ந்நெறி.

சிறப்பு வெளிப்படை. பாடல் 77, அடி 4:

ப. ஈதலாது, பு. இஃது அலாது.

எதுகை நயம் உடைமை வெளிப்படை. பாடல் 84, அடி 2.

ப. என்ன, பு. என்னே.

வினு; ஓசை நயத்தோடு அமைகிறது. பாடல் 85, அடி 3.

ப. சிறிதே கொடுமை, பு. சிறிதென கொடுமை

எனது என்று தம்மைக் குறித்து இரங்குவது சிறப்பு. பாடல் 86, அடி 4:

ப. வழி வந்து, பு. வழுவாது.

சிறப்பான தொண்டு செய்து, நின் தாள் சேர்தல் வழுவமாட்டார் என்பதே பொருள். வழி வந்து என்பதில் தொடர்பு இல்லை. பாடல் 87, அடி 2:

ப. போவுலகம், பு. போராவுலகம்.

மோனை நயம் உடையது. பொருள் ஒன்றே. பாடல் 92, அடி 4:

ப. பொய்யிலங் கெனைப் புகுதவிட்டு,

பு. பொய்யிலிங் கெனைப் புகுதவிட்டு.

உத்தரகோச மங்கையுள் தம்மை இங்கு இரு என்று நிறுத்தி விட்டு இறைவன் சென்று விட்டாராதலால், இங்கு எனை என்பதே பொருளுடைய பாடமாகும். பொய் இலங்கு என்று பிரித்து, பொய் விளங்கும் இயல்புடைய என்று பொருள் செய்வது பிழை. பொய்யான உலகில் இங்கு என்னை என்பதே மாணிக்க வாசகர் வரலாற்றுக்குப் பொருந்திய உண்மை.

7. திருவெம்பாவை :- பாடல் 10, அடி 5:

ப. ஒரு தோழன், பு. ஒரு தோழும்.

ஒரு தோழன்—ஒப்பற்ற உயிர்த் துணைவன் என்று பொருள் சொல்லப்படும். ஆனால் ஒரு தோழம் என்பதே சரியான பாடம். தோழம் என்பது ஒரு பேரெண். சம்பந்தர் தேவாரம் (804) ஒரு தோழம் தேவர் என்று குறிப்பிடும். பரிபாடல் (1. 70) ஒரு தோழம் காலம் என்று குறிப்பிடும். துன்றி நிறைந்துள் சூழலுடன் பல தோழங்கள்' என்பது, பெரிய புராணம். (941) பாடல் 18, அடி 5 :

ப. பிறங்கு ஒளிசேர் விண், பு. பிறங்கு ஒலிசேர் விண்.

ஒளி பொருந்திய விண் என்பதைவிட, ஒலி சென்று ஒடுங்குவதற்கு இடமாகிய ஆகாச தத்துவம் என்று பொருள் அமைவது சிறந்தது.

8. திரு அம்மானை :- பாடல் 7, அடி 5 :

ப. தாயான தத்துவனே, பு. தாயானைத் தத்துவனே.

தாயானே என்று முடிவாக இருப்பது முன் பின் வரும் தொடர்களோடு நன்கு பொருந்துகிறது. பாடல் 8, அடி 5.

ப. மண் சுமந்து கூலி கொண்டு,
பு. மண் சுமந்த கூலி கொண்டு.

சுமந்த என்று பெயரெச்சமாகி கூலி என்ற சொல்லைக் கொண்டு முடிவது சிறப்பு. பாடல் 18, அடி 1 :

ப. மென் மொழியாள், பு. இன் மொழியாள்.

இன்மொழி என்பதே இயல்பு. திருத்தசாங்கம் 'இன்சொல் மாகதமே,' 'இன்பான் மொழிக் கிள்ளாய்' என்ற தொடர்கள் காண்க.

9. திருப் பொற்சுண்ணம் :- பாடல் 13, அடி 3 :

ப. ஐயன், பு. ஐயன. ஏடுகளில் மெய்யெழுத்துக்குப் புள்ளி யிராதாகையால் இதைப் புதிய பாடம் என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. அன்றியும் பின்னால்

வரும் தாள்கள் என்ற பன்மைக்குப் பொருந்த ஐயன என்ற பன்மை இருப்பதோடு, இச்சீர் விளச் சீராயிருப்பது தளைக்கும் ஓசைக்கும் பொருந்தும். பாடல் 16, அடி 3:

ப. சேவகம் ஏந்திய, பு. சேவலன் ஏந்திய.

சே-இடபம், அகம்-அகத்தே, இதை விட இடபக் கொடியை வலத்தே ஏந்தினான் என்பது சிறப்பு.

11. திருத்தெள்ளேணம் :- பாடல் 7, அடி 2:

ப. வலித்தாண்டு, பு. வலிந்து ஆண்டு.

வலிந்து தானாக விரும்பி (என் முயற்சி இன்றி)

13. திருப்பூவல்லி :- பாடல் 8, அடி 3:

ப. முழுது உடற்றும், பு. முழுது உழற்றும்.

உடற்றும்-வருத்துகின்ற, உழற்றும்-அலையச் செய்கின்ற, சுழலச் செய்கின்ற, நல்வினை தீவினை இரண்டுள. ஆதலால், வருத்தத்தை விட சுழற்சியே சிறப்பு.

14. திருவுந்தியார் :- பாடல் 4, அடி 3:

ப. பங்கனென்று, பு. பொங்கநின்று.

இள முலை பங்கன்-சிவபிரான்; இது பொருத்தமன்று. மற்று ஆடுகின்ற பெண்ணின் ஆட்டத்தைக் குறிப்பிடுதலே பாடலுக்கு இயல்பு. பாடல் 11 காண்க.

15. திருத்தோள் நோக்கம் :- பாடல் 3, அடி 3:

ப. சேடு அறிய, பு. சேடு எறிய.

சேடு அறிய-பெருமையை யாவரும் அறிய. பொருள் விளக்கமில்லை. சேடு எறிய-கண்ணப்பர் வாய் கலசமாகக் கொண்டு வந்த புதப்புனல் அலையெறிந்து பெருமானுக்கு மெய் குளிர்ந்தது. சேடு-புதப்புனல். கண்ணப்பர் அன்பின்

பெருமை கண்டு ஈசன் மெய் குளிர்ந்தான் என்பதனைப் பார்க்க, புதப்புனலால் மெய் குளிர்ந்தான் என்பதே பொருட் சிறப்புடையது. இது செருப்புற்ற சீரடி, வாய்க் கலசம், ஊனமுதம் என்பவற்றோடு தொடர்புபட்டு நிற்கிறது.

16. திருப் பொன்னூசல் :- பாடல் 4, அடி 1 :

ப. நஞ்சமர், பு. நஞ்சமார்.

பொருள் ஒன்றாயினும் பிந்தியது எதுகை நயம் பெற்றுள்ளது.

19. திருத்தசாங்கம் :- பாடல் 5, அடி 2 :

ப. மஞ்சன் மருவு, பு. மஞ்சு மருவு.

மஞ்சன்-மைந்தன், மஞ்சு-மேகம். பெருந்துறைக் கோனாகிய மைந்தன் எழுந்தருளிய மலை என்பதனைப் பார்க்க, அக்கோனுடைய மேகம் தங்குகின்ற மலை என்பது பொருட் சிறப்புடையது. பாடல் 6, அடி 3 :

ப. தெய்வப் பெண், பு. தெய்வப் பண்.

தெய்வ மகளிர் என்பதனினும் பார்க்க, தெய்வ இசையினால் துதிக்க என்பது சிறப்பு.

20. திருப்பள்ளியெழுச்சி :- பாடல் 1, அடி 2 :

ப. எழில் நகை கொண்டு, பு. எழில் நகை கண்டு.

எமக்கு அருள் மலர்கின்ற உனது, கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பு' ஆகிய எழில் நகையைக் கண்டு என்பது சிறப்பு.

22. கோயில் திருப்பதிகம் :- பாடல் 4, அடி 3 :

ப. இருளில் தெளிந்த துவெளியே,

பு. இருளில் தெளிந்த தூஒளியே.

இருளில் நீ ஒளியாக வந்தருளுகின்றாய் என்பதே பொருளுடையது. பாடல் 5, அடி 3 :

ப. சிறை பெறு, பு. சிறை பொறு.

சிறை பெறாத நீரை விட, சிறையைப் பொறுக்காத நீர், சிறையை உடைத்து அதி வேகமாகப் பாயும்.

23. செத்திலாப்பத்து :— பாடல் 2, அடி 2 :

ப. வற்றியாரும், பு. மற்றுயாரும்.

வற்றி என்பதற்கு விளக்கமில்லை. மற்று என்னும் போது அண்டவாணரும் வானுலகத்தவரும் அல்லாத ஏனையோரும் என்று பொருளாகும்.

25. ஆசைப்பத்து :— பாடல் 1, அடி 1 :

ப. கருடக் கொடி, பு. கருளக் கொடி.

கருளன்-கருடன், இச் சொல்லாட்சியும் பழமையாகவே உள்ளது. இது எதுகைக்குப் பொருந்துவது.

அடி 3. ப. கூவும், பு. கூவிக் கொள்ளும்.

கூவும் என்பதில் ஓர் அசை குறைகிறது. கூவிக் கொள்ளும் என்பதில் ஓர் அசை மிகுதியாயிருப்பினும், இரண்டாம் பாடல் முதலியவற்றில் கூவிக் கொள்ளாய் என்றே வருவதை நோக்குக.

பாடல் 4, அடி 3 : ப. உன் ஒளி, பு. உள் ஒளி.

உன் ஒளி என்பது ஆறாம் பாடலில் வந்திருப்பினும், உருகி உள் ஒளி காண்பதற்கே ஆசைப்பட்டார் என்பது சிறப்புடையது.

பாடல் 5, அடி 2 : ப. இருந்தும், பு. திருந்தும்.

இருந்தும் என்பதிலுள்ள உம்மையானது பின்னால் ஆண்டு கொண்ட என்ற கருத்தினால் பொருளற்றதாகப் போகிறது.

நான் புளியம் பழம் ஒத்திருந்தேன், அப்படியிருந்தும் என்னை நீ ஆளவில்லை என்பதே தொடர்பு; ஆனால் இங்கு, ஆண்டு கொண்டாய் என்று சொல்வது தொடர்பில்லாமல் போகிறது. ஆகவே இருந்தும் என்பதைவிட திருந்தும் என்பதே சரி. திருந்தும் விடையாய் என்னும்போது விடைக்கியல்பான ஓர் அடையாக இச்சொல் நின்று விடுகிறது. அடி 4: ப. அளியேயேன். பு. அளியன். எதுகை நயம்.

31. கண்டபத்து :- பாடல் 10, அடி 1:

ப. பொருளாகி, பு. பொறியாகி.

புலன் என்று தன்மாத்திரையைச் சொன்ன பின் பொறி என்று இந்திரியத்தைச் சொல்வதே இயல்பாக வரத்தக்கது.

35. அச்சப்பத்து :- பாடல் 8, அடி 1:

ப. தறிசெறி, பு. தறி செறு.

தறியில் கட்டப்பட்ட (செறி) களிற்றுக்கு அஞ்சேன் என்பதை விட, தறியைச் செற்று உடைத்துப் போடுகின்ற களிற்றுக்கு அஞ்சேன் என்பது சிறப்பு.

36. திருப்பாண்டிப் பதிகம் :- பாடல் 4, அடி 1:

ப. தென்னன் நன்நாட்டு, பு. தென்னன் இந்நாட்டு.

இறைவன் நல்ல நாட்டுக்கு உரியவன் என்று சொல்வதில் சிறப்பில்லை. தென்னவன் இந்த நாட்டு இறைவன் என்று சொல்வது இயல் மொழியாக அமைகிறது.

37. பிடித்தபத்து :- பாடல் 1, அடி 1:

ப. ஊற்றையேன், பு. ஊத்தையேன்.

ஊற்றையேன் என்ற சொல் இல்லை. ஊத்தையேன் - அழுக்குடையவன். பாடல் 3, அடி 3:

ப. சீருடைக் கழலே, பு சீருடைக் கடலே.

பெருமானுடைய திருவடியை முன்னிலைப்படுத்தி, கழலே என்று விளிப்பது திருமுறை மரபில் எங்குமே இல்லை. அடுத்த பாடலில், 'எனையாண்ட கடவுளே கருணைமா கடலே' என்று வருவது போல, இங்கும் 'சீருடைக் கடலே' என்பதே பாடம்.

40. குலாப்பத்து :- பாடல் 8, அடி 3 :

ப. வல்லாட்டை, பு. வல்லரட்டை.

அரட்டு-குறும்பு, கண்டகருடைய ஆட்டம் என்பதை விட, குறும்பு என்பதே பொருள் உடையது. அரட்டு என்ற சொல் திருமுறைகளில் பல இடத்தும் பயில்வது.

பாடல் 9, அடி 2: ப. கிழியீடு, பு. கிளியீடு.

கிழியீடு என்பது பொற்கிழி கிடைத்தல் என்னும் பொருளது. பாழான வயலை உழுது பயனின்றிக் கிடப்பேனுக்குப் பொற்கிழி நேர்பட்டது என்பது தொடர்பில்லாமல் இருக்கிறது. கிளியீடு, கிளிகள் கொய்து வைத்திருக்கும் கதிர்க் கற்றையாகிய தானியக் குவியல். பாழ்ச் செய் உழுது பயனற்றவனுக்கு இங்கு நெல் கிடைத்தது என்பதே நேரிதான பொருள்; புதையல் கிடைப்பது என்பது பொருளாகாது.

41. அற்புதப்பத்து :- பாடல் 9, அடி 3 :

ப. இச்சகத்து, பு. விச்சகத்து.

அரியயனுக்கும் எட்டாத மலர்க்கழல் தமக்குக் காட்டியது விந்தை. இச்சகத்து-இந்த உலகில் என்பது சிறப்பில்லை. விச்சகம்-வித்தகம்-விந்தை.

44. எண்ணப்பதிகம் :- பாடல் 3, அடி 4 :

ப. நண்பே, பு. நன்பே.

நன்பு-நட்பானவனே. ஆனால் நன்பு-செம்மை செய்பவனே, சிவமே என்பது சிறப்பு. நன்பு என்ற சொல் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் பல இடங்களில் வருகிறது.

45. யாத்திரைப் பத்து:- பாடல் 5, அடி 1:

ப. மிகவோர், பு. மிகவே. ஓர் என்பதற்கு இங்கு பொருள் இல்லை.

47. திருவெண்பா:- பாடல் 7, அடி 3:

ப. திருத்தெதன், பு. திருத்தன். திருத்தன், பெருந்துறையான், ஒருத்தன் என்று தனித்தனி முடிவு பெற்றிருப்பதே சிறப்பு.

48. பண்டாய நான்மறை:- பாடல் 7, அடி 1:

ப. இலக்கிதமாம், பு. இலக்கிதமாய்.

இலக்கிதமாம் மணி என்று சென்று முடிகின்ற முடிபைவிட, ஆகி பேச்சு இறந்த மணி என்று முடிவது சிறப்பாக வுள்ளது.

49. திருப்படையாட்சி:- பாடல் 8, அடி 2:

திருப்படையாட்சி மாணிக்கவாசகர் சகல வேதங்களும் அடங்கிச் சகல உணர்வுகளும், அடங்கி நிற்கின்ற ஓர் அனுபவத்தைக் குறிப்பிடுகிறார். ஆனம போதமும் செயலும் ஓய்ந்து யாவும் சிவமாகவே நிற்கும் நிலையைக் கூறுகின்றார். 'இது நன்று இது நன்று' என்று சொல்லும் மாயை என்ற கருத்தை விட 'இது தீது இது நன்று' என்று சொல்லும் மாயை என்னும் கருத்து சிறப்பானது.

சில விளக்கங்களை எமது திருவாசகக் குறிப்புக்கள் என்ற நூலில் திருத்தமான பாடம் என்ற அத்தியாயத்துள் காணலாம்.

திருக்கோட்டாறு

(மு. அ.)

காவிரித் தென்கரைத் தலங்களுள் 55–ஆவது தலம் திருக்கோட்டாறு என்பது. இத்தலம் சம்பந்தருடைய பதிகம் உடையது.

13—5—68 இல் இந்துப் பத்திரிகையில் பத்மநாபம் என்பவர் "கோட்டார்" என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதனுள் அவர் சோழ நாட்டில் திருக்கோட்டாறு என்று ஒரு தலம் இருப்பது தெரியாமல், மேல்கடற்கரையில் நாகர் கோயிலில் உள்ள கோட்டாறே சம்பந்தர் பதிகம் கொண்டது என்று எழுதியிருக்கிறார். இது பிழை.

திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் சிறப்பாகக் கோட்டாறு என்ற பெயருடைய இரண்டு தலங்கள் இருந்தமை உண்மை. இவற்றுள் சோழ நாட்டுக் கோட்டாறு பதிகங் கொண்டது. சேர நாட்டுக் கோட்டாறு, பாண்டியன் நெடுமாறன் வரலாற்றின் சிறப்புப் பெற்றது. பிந்திய கோட்டாற்றில் சிறப்பான கோட்டை இருந்தது. நெடுமாறனுடைய படை இக்கோட்டையை அழித்து இந்நகரைக் கைப்பற்றிய செய்தி, பாண்டிக் கோவையுள் பத்துப் பாடல்களுள் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் இங்கு சிவாலயம் இருந்ததாகவோ, நம் சமயாசாரியார் அங்கு சென்றதாகவோ, வரலாறு இல்லை. சேர நாட்டில் நாயன்மார் பாடல் கொண்ட ஒரே தலம் திருவஞ்சைக்களமாகும்.

சோழ நாட்டுத் திருக்கோட்டாறு பற்றிய தலக்குறிப்புக்களை இனி கீழே காணலாம். சேக்கிழார் பெரிய புராணத்தில் சொல்லும்போது சம்பந்தர் திருநள்ளாற்றைப் பணிந்து, சுற்றியுள்ள பிற பதிகளையும் வணங்கிச் சென்றார் என்று சொல்லுமிடத்து, இந்தத் தலத்தையும் உள்ளடக்கிச் சொல்வதாக நாம் கருதுகிறோம்.

இடம் :- இக்கோட்டாறு தஞ்சை ஜில்லாவில் மாயூரம் தாலூக்கா பேரளத்திலிருந்து கெடுங்காடு வழியாகக் காரைக்கால் செல்லும் பஸ் மார்க்கத்தில் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இந்தப் பாதையில் முதலில் உள்ளது சாலையின் வடபுறம் சிறுபுலியூர் என்ற வைணவத் தலம். இங்கு மிகச் சிறு வடிவினராகிய அரங்கநாதர் பள்ளிகொண்டிருக்கக் காணலாம். அடுத்துக் கொஞ்ச தூரத்தில், சாலையின் தென்புறம் சிற்ருற்றைக் கடந்து கோட்டாறு செல்கிறோம். ஆற்றின் மேலுள்ள சிறு மூங்கில் பாலத்தின் வழியாக, அல்லது ஆற்றில் இறங்கி நடந்தே, கோயிலுக்குச் செல்ல வேண்டும். சாலையிலிருந்து கோயில் முக்கால் மைல் இருக்கும். கோயிலைச் சூழ்ந்து மக்கள் குடியிருப்பு இருந்து இப்போது எல்லாம் அழிந்த நிலை; அடையாளங்கள் மட்டும் உள்ளன. செல்வந்தரான சிறந்த சைவ முதலியார்கள் வசத்தில் இக்கிராமம் இருந்து இப்போது கைமாறிவிட்டது.

பெயர் :- திருக்கொட்டாரம் என்று வழங்குகிறது. ஐராவதமாகிய இந்திரனுடைய யானை தான் பூசை செய்வதற்காக நிலத்தைத் தன் கோட்டினுல் குத்தி நீர் வரச் செய்த ஆறு உடைமையால் கோட்டாறு போலும். சுவாமி பெயர் ஐராவதேசுவரர்; அம்பிகை வண்டார் பூங்குழல் நாயகி; சம்பந்தர் தேவாரத்துள் (2927) "வண்டாரும் பூங்குழல் மங்கை நல்லாள் ஒரு பாகன்" என்று பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. தலவிருட்சம் பவழமல்லிகை போலும். சூரிய தீர்த்தம் தலக் கலிவெண்பாப் பகுதி பின்வருவது;

—மாண்டகுகோட்

டாற்றின் மிகுவண் டமர்பூங் குழலியொடு
தோற்றும் அயிராவத சுவாமியே.

கோயில் :- தென்னஞ்சோலை சூழ்ந்தது. சிறு கோபுரம். பழமையான கோயில், மகாமண்டபத்தில் விநாயகர். பலகணி அடிவரி பழமையான யாளியும் யானையும், மூலையில் இரு யாளியும், யாளிவாயில் வான கேடயம் தாங்கிய வீரனும். இவ்வமைப்புக் கோயிலின் பழமையை உணர்த்துவது.

மூர்த்தி :- பாலவிநாயகர், இதன் பிரகாரக் கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி, பின்புறம் திருமால், திருமாளிகைச் சுற்றில் கன்னி விநாயகர், நாகராசன், சுந்தரர், பரவையார், கயிலாயநாதர், சம்பந்தர் வடிவம் அப்பர் வடிவம்; பைரவர், அகத்தியலிங்கம், சுபகமகரிஷி; இவர் தலையில் ஜடாமுடி எடுத்துக் கட்டியிருப்பது இக்காலத்தில் வெள்ளைக்காரர் 'ஹாட்' போட்டமாதிரியுள்ளது. முருகன் தேவியரோடு, வடகோட்டத்தில் பிரமன், சிறுசண்டேசர் வடிவம். கிழக்கில் பைரவர், சூரியன், துவார விநாயகர்.

உற்சவர், சோமாஸ்கந்தர்; தனி அம்பிகை அழகான பெரிய திருவுரு, சேடிகளுடன்; வில்லேந்திய முருகன், சண்டேசர் பெரிய உருவங்கள். சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரர், நடராசர், அம்பிகை.

பாடல் :- சம்பந்தர் பதிகம் சீகாமரப்பண் ஒன்று, காந்தார பஞ்சமம் ஒன்று ஆக இரண்டு.

வரலாறு :- இங்கு குமாரபுவனேசுவரர், அகத்தியர், சுபகமகரிஷி, ஐராவதம் ஆகிய நால்வரும் முறையே நான்கு யுகங்களில் பூசித்தனர். இப்போது இது பற்றிச் சுவாமிக்கு ஐராவதேசுவரர் என்ற பெயர் உள்ளது. மற்றைய லிங்கங்களும் உள்ளன. சம்பந்தர் இரண்டாம் பாடலில் யானை பூசித்த வரலாற்றைக் கூறுகிறார்.

"நின்று மேய்ந்து நினைந்து மாகரி
நீரோடும் மலர் வேண்டி வான்மழை
குன்றின் நிமிர்ந்து குத்திப்பணி செய்யும்
கோட்டாறு."

விழா :- மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், கார்த்திகை விழா.

நிர்வாகம் :- குழுவும் அதிகாரியும் உள்ளனர். 60 ஏகராவுக்கு மேற்பட்ட சொத்து. முன்னம் கோட்டாறு முதலியார் என்ற பெருஞ் செல்வர் குடும்பத்தார் நிர்வகித்தனர். அக்குடும்பம் இக்காலை குலைந்து விட்டது.

திருக்குறளில் இறையுண்மை.

(கா. சிவகாமி எம். ஏ., உதகை.)

இறை வணக்கமில்லான் கல்வி நலம் அறிவின்பாற் பட்டதன்று. அறியாமைத்திரை விலகவே கல்வி விளக்க மென்றால் அக்கல்வி இறையுணர்வை வளர்க்க வேண்டும். அங்ஙனம் வளர்க்காத கல்வியறிவு கற்பதாயினும், போதிப்பதாயினும் தகுதியற்றதாகும். இதை உலகிற்கு உணர்த்தவே வள்ளுவனாரும் தமது நூலை இறைவாழ்த் தொடு தொடங்குகின்றார்.

இங்கு, வள்ளுவரைச் சமண பௌத்தத்தோடு தொடர்புபடுத்துபவர்கள், அங்ஙனம் சேர்ப்பது தகுதி யன்று என உணர வேண்டும். ஏனென்றால் சமணரும் பௌத்தரும் இறைவனை நம்பாதவர்கள். 1 அவர்கள் 'வினைக்கே' சகல வல்லமையையும் கொடுத்து இறையுண் மைக்கு மாறுபடுகின்றனர். இனிச் சைவத்தை எங்ஙனம் வள்ளுவர் தம் நூலுள் தழுவிக் கொள்கின்றார் எனப் பார்ப்போம்.

ஐம்பத்தொன்றாம் அக்கரங்களுக்கு அகரவுயிர் முன் நிற்கும் என்பது சைவர் கொள்கை. இதனை, "அக்கரங் கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்" என்று மெய்கண்ட தேவரும், "அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன்" என்று அருணந்தி சிவமும், "அக்க ரங்கட் கெல்லாம் அகர உயிர் நின்றாற்போல் மிக்க உயிர்க் குயிராய்" 2 என்று மனவாசகங் கடந்தாரும், "அகர உயிர்போல அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து"3 என உமாபதி சிவாசாரியாரும் கூறுதலைக் கொண்டு நன்குணரலாம். காலத்தால் முற்பட்ட திரு

1. இந்திய தத்துவ ஞானம். பக். 53–54; 79–80
2. உண்மை விளக்கம்–28 3. திருவருட் பயன்–1

மூலரும், "1 அகர முதலாக ஐம்பத்தொன்றாகி" எனவும் "2 அகராதி ஈரெண்கலந்த" எனவும் குறிக்கின்றார், அருட்செல்வர்களான, ஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும், முறையே "3அகரமுதலானை அணியாப்பனூரானை" எனவும், "4 ஆனத்தின் முன்னெழுத்தாய் நின்றார் போலும்" எனவும் "5 அகரமுதலின் எழுத்தாகி நின்றாய்" எனவும் பாடிப் பரவுகின்றனர். இங்ஙனம் இவ்வருட் செல்வர்கள் அகரம் ஏனைய அக்கரங்களுக்கு முன்னின்றாற்போல இறைவன் எல்லாவற்றிற்கும் முதன்மையாயினான் என்ற உண்மையை உலகின்முன்வைக்கின்றனர்.

இவ்வுண்மையையே இவர்கட்கெல்லாம் காலத்தால் முற்பட்ட வள்ளுவப் பெருந்தகையும் இறைவாழ்த்தின் முதற் குறளிலேயே, இறைவனின் முதன்மையைக் குறிப்பான்வேண்டி, "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்று குறித்துச் சென்றார்.

எல்லாவற்றிற்கும் முதன்மையாளனாகிய இறைவன் எத்தன்மையன்? இரண்டாங்குறளில் இறைவனின் 'தூய அறி'வான தன்மையைக் கூறுகின்றார். செம்பொருளான இறைமையைக் காண்பதற்கே 6 கல்வி, உயிருக்கு அறிவு விளக்கஞ் செய்கின்றதென்றால் அங்ஙனம் கற்றபின்பும் வாலறிவனாகிய இறைவனைத்தொழ, அது பயன்படவில்லையானால் அந்த அறிவால் பயனென்ன? என்று வினவுகின்றார் திருவள்ளுவர். "உணர்த்த உணரும் 7" சிற்றறி

---

1. திருமந்திரம்–2650
2. ,, ,, –2651
3. சம்பந்தர் தேவாரம்–88–5
4. அப்பர் தேவாரம்–6–28–1 5. சுந்தரர் தேவாரம்–7–3–7
6. குறள்–356
7. சிவஞானபோதம்–3 * சிவஞானபோதச் சொற்பொழிவு

வாக இருப்பது உயிர்; அது மெய்ப்பொருள் கண்டு 'உணர்த்த உணராத' "வாலறிவா'கிய இறைவனுடன் ஐக்கியப்படவேண்டும். இதுதான் வள்ளுவர் கருத்து.

இனிச் சைவர்களுக்கு இறைவன் எப்படிப்பட்டவன்? "சித்தாந்தம்' என்ற சொல்லிலுள்ள 'சித்' என்ற சொல் லுக்கு அறிவு' என்றே பொருள். 'சிவம்' என்ற சொல்லும் இப்பொருளையே குறிக்கும் என்பர் அறிஞர்.1 அறிவுவடிவானவனே இறைவன் என்பதைத் திருமூலர்,

"அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே', 2

என்று கூறுகின்றார். காரைக்காலம்மையாரும், "அறி வானுந்தானே, அறிவிப்பான்தானே, அறிவாய் அறிகின் றான் தானே"3 என்று அறிவு வடிவான இறைவனைப் பாடுகின்றார். சித்தாந்த சாத்திரங்களுட்பட்ட 'கொடிக் கவியுள்,' "பிறித்தறிவு தம்மிற் பிரியாமைதானே4" எனவும் 'திருக்களிற்றுப்படியாருள்' "அவனே அவனி முதலாகி நின்றானும், அவனே அறிவாகின்றானும்"5 என வும், 'திருவருட்பயனுள்,' "அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும்" 6 எனவும் இறைவனின் அறிவு வடிவான தன்மையைக் குறித்தலைக் காணலாம். எனவேதான் சைவந்தழுவிய சான்றோராகிய வள்ளுவரும், ஆணவத்தால் கட்டுண்டு கிடக்கின்ற சித்தாகிய அறிவி னின்றும், 'சதசித்,தாகிய பேரறிவை வேறுபடுத்திக்காட் டவே 'வாலறிவன்' என்று குறிக்கின்றார்.

நூல் பக். 40

1. சிவஞானபோதச் சொற்பொழிவு நூல் பக். 40
2. திருமந்திரம்–2317
3. அற்புதத்திருவந்தாதி 4. கொடிக்கவி–3
5. திருக்களிற்றுப்படியார்–87 6. திருவருட்பயன்–1

இறைவனின் முதன்மையையும், தனித் தன்மையையும் குறித்த வள்ளுவர், அவன் அன்பர்களின் மனமாகிய மலரின்கண் இருக்கிறுனென்று அவனது கருணையையும் மூன்ருவது குறளில் குறிக்கின்ருர். அதாவது, "மனமாகிற தாமரையினிடத்துப் பொருந்தி இருப்பவன் அவன்! இதனை வடமொழியிலும்,

"ஹ்ருத் புண்டரீகாந் தரஸென்னி விஷ்டம்"1 என்றனர். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும், "2 மனனுணர்வொடு மலர்மிசை யெழுதருபொருள்." "3உள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் பூராணர்," "4சுடர்க்கமலப் போதகஞ்சேர் புண்ணியனுர்" என்று கூறிச் செல்லலையும், நாவுக்கரசர், "5எரியாய தாமரைமேல் இயங்கினுரும்" "6 அடித்தாமரை மேல்வைத்தார்" எனவும் பாடுவதையும் காண்க. இங்ஙனம் அன்பரின் மனத்திலிருக்கின்றமையால் இறைவன் 'வேண்டுதல் வேண்டாமை உடையவனே என்ற ஐயம் எழுவது இயல்பு. இவ் ஐயததிற்கு இடங்கொடாமல் இறைவனை "வேண்டுதல வேண்டாமை இலான்" என வள்ளுவர் நான்காம் குறளில் கூறினுர்.

முதல்வனும், வாலறிவனும், அன்பர்மனத்தமர்ந்தோனும், வேண்டுதல் வேண்டாமை இலானுமாகிய இறைவனை நாமே சென்றடைதலாற் பயனென்ன? "இருள்சேர் இருவினையும் சேர்வதிலலை—இதுதான் பயன்! இருவினையாவது பிறப்பு இறப்பை நல்கும் கன்மம் எனும் மாயை. இந்த 'இருவினை'க்குச் சைவர், சமண பௌத்தர்

1. கடவுளின் வடிவங்கள் பக். 148
2. சம். தேவா. 1–21–5
3. சம்பந்தர் தேவாரம். 1–132–6
4. சம். தேவாரம். 1–66–2
5. அப்பர் தேவாரம். 6–16–7
6. அப்பர் தேவாரம், 6–21–1

கள் கொடுக்கின்ற அளவு முதன்மையைக் கொடுக்காவிடி னும், சித்தாந்தத்துள் இதற்கு ஒரு முக்கிய இடமுண்டு. இருள்மலமாகிய ஆணவத்தாலேயே 'இருவினை'யாகிய கன்மமும், மாயையும் வந்தடைகின்றன' என்பது சைவ சித்தாந்தம். இதனையே 'இருள்சேர் இருவினை' என்றார் வள்ளுவரும்.

அநாதி காலந்தொட்டு ஆணவமாகிய இருளினாற் 'செம்பிற்களிம்பு' போலக் கட்டுண்டு கிடக்கின்ற உயிர் களை உய்விக்கவேண்டி, இறைவன் தனது பெருங்கருணை யினால், மாயையிலிருந்து உலகையும், உயிர்களுக்குச் சிற் றறி விளக்கங்களாக உடலங்களையும் தந்தருளினான். அங்ஙனம் உடல்களைப்பெற்ற உயிர்கள் கன்மம் அல்லது இருவினைக்குக் காரணமாயின. இக்காரணத்தால் அவை "ஒழியாப் பிறவியெடுத்தெடுத்தேங்கி அலமருகின்றன. இதனை V. P. காந்திமதிநாத பிள்ளையவர்கள் 'தூல தேகங்களோடு (உயிர்) கூடிய காலத்து, இன்ப துன்பங் களை நியதிப்படுத்துவது இவ்வினையே. இஃது இருதிறப் படும். அவை நல்வினை, தீவினை என்பன. இவ்விரு வினை களும் பிறவிதோறும் உயிர்களால் ஈட்டப்பட்டு வரும்" என்று தெளிவுபடுத்துகின்றார்.1

நல்வினையைச் செய்தாலும், தீவினையைச் செய்தா லும் பிறவி. தப்புவதில்லை! ஏனென்றால் "2பாவம் என் பது இரும்புச் சங்கிலி; புண்ணியம் என்பது பொற்சங் கிலி; இரண்டும் பந்தத்தை உண்டுபண்ணுபவைகளே." எனவே பிறவியினின்றும் தப்ப வேண்டுமானால் இவ்விரு வினையையும் ஒன்றாக எண்ணி நீங்க வேண்டும். இதனைச் சைவர் 'இருவினையொப்பு3' என்பர். திருமூலரும், "4இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி" எனவும்

---

1. சிவஞானபோதச் சொற்பொழிவு நூல் பக். 30
2. Inspired Talks
3 இந்தியத் தத்துவ ஞானம் பக். 382
4. திருமந்திரம்-1501

"1இருவினை யொத்திட இன்னருட் சத்தி" எனவும் குறிக்கின்றார்.

'இருள்சேர் இருவினை' என்றது இருளாகிய ஆணவத்தைச் சார்ந்தன இருவினைகள் என்று விளக்கும் பொருட்டாகும். "புறத்தே காணப்படும் பூத இருளானது கண்ணால் ஒருபொருளையும் காணாதவாறு உருவத்தை மறைத்து நிற்பது. இவ்வாறே உயிர்களின் அகத்துணர்வாகிய அறிவுக்கண்ணை மறைப்பதாகிய இருளொன்று உண்டு. 2" அதுவே ஆணவம். இதனைத் திருவருட் பயனுடையார்,

"ஒருபொருளுங் காட்டாது இருள் உருவங் காட்டும்
இருபொருளுங் காட்டாது இது 3" என்று கூறுகின்றார்.

இனி இவ்வாணவ இருளினால் வந்து சேர்ந்த கன்மம் அல்லது இருவினையைப் பற்றிச் சிவநெறியாளர் குறித்துச் செல்வனவற்றைக் காண்போம். சிவஞானபோதத்துள், "4அவையே தானே ஆய் இருவினையின் போக்குவரவு புரிய" எனவும், சிவஞானசித்தியாரில், "5இருவினை அநாதி ஆகி இயற்றலால் நுகர்வால் அந்தம்" "6இருவினை இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்" எனவும் இருபாவிருபதுள், "இருவினை யென்பது என்னை கொல் அருளிய மனமே காயம் வாக்கெனும் மூன்றின் 7" எனத் தொடர்தலும், திருவருட் பயனுள், "8மும்மை தரும் வினைகள் மூளாவாம்" எனவும்,

(தொடரும்)

---

1. திருமந்திரம்–2223
2. பன்னிரு திருமுறை வரலாறு பக். 606
3. திருவருட் பயன்–23
4. சிவஞானபோதம்–2
5. சிவஞான சித்தியார்–சுப–130
6. சித்–சுபக்–94
7. இருபாவிருபது–5–6
8. திருவருட்பயன்–98

அப்பர் சுவாமிகள்

(கொ. ந. சிங்காரவேலு எம். ஏ.,)

சைவ சமயத்திற்கு ஆதாரமாக இருக்கும் சமய குரவர்கள் நால்வர். அவர்கள் வாழ்ந்த காலத்தை நினைவு படுத்திக் கொள்வது பயனுடையதாக யிருக்கும். முக்கியமாக திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வாழ்ந்த காலத்தில், சைனமும், பௌத்தமும் இந்தியாவில் மிகவும் பரவியிருந்தன. அச்சமயங்களைப் பெரும்பாலான மக்களும் அரசர்களும் பின்பற்றியதின் காரணம் என்ன? அச்சமயக் குருக்கள் தம் சமயத்தைப் பரப்புவதற்கு ஒரு புது முறையைக் கையாண்டார்கள். அம்முறையாவது தர்க்க முறை. அவர்கள் மக்களின் அறிவு, ஆராய்ச்சி, பகுத்தறிவு இவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். தங்கள் கொள்கைகளைத் தர்க்க ரீதியில் காரண காரியத் தொடர்போடு எடுத்துச் சொல்லி மக்களின் அறிவை மயக்கினர். மக்கள் அத்தர்க்கங்களை மறுத்துக் கூறும் ஆற்றல் அற்றவர்களாய் அம் மதங்களைச் சார்ந்தனர். அக்காலத்தில் தான் தென்னாட்டில் ஸ்ரீ சங்கரர் அவர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரும் தோன்றினர். ஸ்ரீ சங்கரர், சைனர், பௌத்தர் கூறும் தர்க்கங்களைத் தர்க்கம் கொண்டே வென்றார். அவர்கள் தத்துவங்களில் இறைவனுக்கே இடமில்லை. இதற்கு நேர்மாறாக ஸ்ரீ சங்கரர் தத்துவத்தில் இறைவனைத் தவிர வேறு பொருளுக்கே இடமில்லை. பௌத்த, சைனர்களுடைய நடுநிலைமையற்ற வட துருவம் போன்ற இறுதி நிலையிலுள்ள கொள்கையை, தென் துருவம் போன்ற நேர்மாறான மற்றொரு இறுதி நிலையில் உள்ள கொள்கையைக் கொண்டு தான வெல்ல முடியும் என்று ஸ்ரீ சங்கரர் கருதினார் போலும். ஸ்ரீ சங்கரர் தத்துவம் வட இந்தியாவில் மிகவும் பரவியது. சைவ சமய குரவர்கள் சைன, பௌத்த மதங்களை வெல்ல மற்றொரு முறையைக் கையாண்டனர். அதுதான் பக்தி நெறி· இறைவன் உண்மையை வாதம் செய்து நிறுவ வேண்டிய அவசியமில்லை. அதை நமது

குரவர்கள் தங்கள் அநுபவத்தில், வாழ்க்கையில், அற்புதச் செயல்களில் காட்டினர்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா, சுடர்விட்டுளன் எங்கள்சோதி"

என்றார் திருஞானசம்பந்தர். இவ்வாறு, இந்தியாவில் சைன, பௌத்த சமயங்கள் ஆதிக்கத்தை ஒழித்து வைதீக சமயத்தை நிலை நிறுத்திய பெருமை திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், ஸ்ரீ சங்கரர் ஆகியோருக்கே சாரும்.

பௌத்த, சைனர்களுடைய மதப் பிரசாரம் போலவே சமீப காலத்தில் பகுத்தறிவு அல்லது சுயமரியாதை இயக்கம் ஒன்று தென்னாட்டில் தோன்றி இளைஞர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. 'சமய வளர்ச்சிக்குரிய பணி முறைகள்' என்ற தலைப்பில் இங்கு ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கில் பலர் பல கருத்துக்களை எடுத்துக் கூறினர். இந்த இடத்தில் இது பற்றிய என் கருத்தையும் கூற விழைகின்றேன். விஞ்ஞானம் மிகவும் வளர்ந்துள்ள இக்காலத்தில் சமயத்தை விஞ்ஞான முறையில், அதாவது பகுத்தறிவுக்கு உகந்த முறையில் எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம். இதற்கு நமது சாத்திரம் துணை புரியும். சைவ சமயத்திற்குச் சாத்திரங்களும், தோத்திரங்களும் இரு கண்கள் போன்றவை. 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே' என்றார் திருநாவுக்கரசர்.

மேலும், தற்காலத்தில் சமய அறிவு ஓரளவு பரவியுள்ளது. ஆனால் சமய சாதனை அருகியுள்ளது. பலர் கூடி கட்டுப்பாடான முறையில் வழிபாடு செய்தல் தற்காலத்திற்கு ஏற்ற முறை என்று கருதுகிறேன். சைவ சமய முறையில் 'அந்தர்யோகம்' முதலிய நடத்துதல், ஒவ்வொரு குடும்பத்திலும் காலையில் கூட்டு வழிபாடு செய்தல் ஆகியவை, முக்கியமாக சிறுவர்களுடைய உள்ளங்களில் சமய உணர்ச்சியை நிலைநிறுத்துவதற்கு ஏதுவாகும்.

உலகத்தில் உள்ள உயிருள்ள பொருள்களை மூன்றாகப் பிரிக்கலாம். அவை தாவரம், விலங்கினம், மனித சமுதாயம் ஆகியவை. தாவரங்கள் தங்களுக்காகவே வாழ்கின்றன. தாவரம், விலங்கினங்களுக்கும், மனிதர்களுக்கும் பயன்பட்டாலும் இது அவை அறிந்து செய்யும் உதவி அல்ல. அறியும் ஆற்றல் அவைகளுக்கு இல்லை. விலங்கினம், தாவரங்களைப்போல் தங்களுக்காக வாழ்வதோடல்லாமல் தங்கள் இனத்திற்காகவும் வாழ்கின்றன. அதாவது அவைகள் கூட்டம் கூட்டமாகத் தங்கள் இனத்தோடு சேர்ந்து வாழ்கின்றன. மனிதன் விலங்கினங்களைப்போல் தனக்காகவும், தன் இனத்திற்காகவும் வாழ்வதோடல்லாமல் வேறு ஒரு உண்மையையும் உணர்ந்து அதன்படி வாழ முயல்கின்றான். அதாவது அவன் தன்னுள்ளே மெய்ப்பொருள் ஒன்று குடிகொண்டிருப்பதை அறிந்து அதோடு சேர்ந்து ஒன்றித்து நின்று தன்னுள்ளே அமைதிகாண முயல்கின்றான். உலகில் மனிதன் தனக்காக வாழ்வதால் பொருளாதாரம் வளர்ந்தது; தன் இனத்தோடு சேர்ந்து வாழ்வதால் அரசியல் வளர்ந்தது, தன்னுள்ளே உள்ள பொருளோடு சேர்ந்துவாழ முயல்வதால் சமயம் வளர்ந்தது. அமெரிக்கா போன்ற நாடுகளில் பொருளாதாரமும் அரசியலும் வளர்ந்தோங்கியிருந்தபோதிலும் தம்முள்ளே அமைதி காணாமையால் அங்குள்ளவர்கள் இந்தியாவிற்கு வந்து நமது சமய நெறிகளைக் கற்றுணர்ந்து அமைதிகாண முயல்கிறார்கள். மனிதன் தனக்காக வாழ்வதோடல்லாமல் தன்னுள்ளே உள்ள ஈசனோடு ஒன்றித்து வாழ முயல்வதைப் பின் வரும் செய்யுளில் திருநாவுக்கரசர் காட்டியுள்ளார் :—

“என்னில் ஆரும் எனக்கினி யாரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக்கு
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே”

சமரச மனப்பாங்கு சமீபகால வளர்ச்சி என்று சிலர் நினைக்கின்றனர். திருநாவுக்கரசரின் சமரச நோக்கைப் பின்வரும் செய்யுட்கள் தெரிவிக்கும். (தொடரும்)

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்
பரிவினாற் பெரியோரேத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தியுய்யும் வகையது நினைக்கின்றேனே",

"வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதொர் தேவரெனப் படுவார்க்கெலாம்
மாதேவன் அல்லால் தேவர் மற்றில்லையே"

தம்மைச் சமண சமயத்தில் புகுத்தி அறவுரைகள் பல வற்றையும் ஓதியுணரச் செய்ததையும் திருவருட் கருணைச் செயலாகவே திருநாவுக்கரசர் எண்ணினார் என்பது பின் வரும் செய்யுளிலிருந்து அறியலாம் :

"ஓதுவித்தாய் முன் அறவுரைகாட்டி அமணரொடே
காதுவித்தாய் கட்டநோய் பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கிற் புளியம்வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய் கச்சியேகம்பனே"

இறைவனை அடைய நால்வகைப் படிமுறைகள் உண்டு என்றும் அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும், திருநாவுக்கரசர் சரியை மார்க்கத்தில் இறைவனை அடைந்தார் என்றும் கூறுவர். இது ஓரளவு தான் உண்மை. திருநாவுக்கரசர் பாடல்களில் நால்வகைப்படி முறைகளையும் பார்க்கலாம். 'நிலைபெறுமாறு எண்ணுதி யேல் நெஞ்சே! நீ வா!' என்று தொடங்கும் பாடலில் சரியை, கிரியை ஆகிய மார்க்கங்கள் வலியுறுத்தப்படுகின் றன.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய்யட்டி உயிரெனுந்திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே."

என்னும் பாட்டில் யோக ஞான மார்க்கங்கள் இடம்பெறு கின்றன. இவ்வாறே இந்நால்வகைப் படிமுறைகளும் திருநாவுக்கரசர் பாடல்களில் விரவி வருகின்றன.

டாக்டர் சுவிட்சர் என்ற மேல் நாட்டுப் பெரியார் பழமையான இந்திய சிந்தனைகள் யாவும் மேலுலக வாழ்வைப் பற்றியே பேசுகின்றன என்றும், இவ்வுலக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும், ஆதலால் சமுதாயத் தொண்டு மனப்பான்மை வளரவில்லை என்றும் கூறினர். இது ஓரளவு உண்மை. நம் சமய குரவர்கள் இறை பணியைத்தான் பணியாகக் கொண்டார்கள். சிவத் தொண்டைத்தான் தொண்டாகக் கருதினர்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இடத்திலும், 'தொண்டு செய்து நாளாறில் கண் இடந்து அப்பவல்லேன் அல்லேன்' என்ற இடத்திலும் சமயத் தொண்டும் சிவத் தொண்டும் தாம் குறிக்கப்படுகின்றன. மக்களுக்குத் தொண்டு செய்து வரும் புண்ணியத்தைப் பசு புண்ணியம் என்றும் இறைவனுக்குத் தொணடு செய்து வரும் புண்ணியத்தைப் பதி புண்ணியம் என்றும் கூறுவர். எனினும், 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' 'நடமாடும் கோயில் நம்பர்க் கொன்று ஈயில்' என்று தொடங்கும் திருமந்திரச் செய்யுட்கள் முதலியன மக்கட்குச் செய்யும் அன்பையும், தொண்டையும் வற்புறுத்துகின்றன. ஒன்றை மட்டும் நாம் திட்ட வட்டமாகக் கூறலாம். கடவுள் உணர்ச்சி யில்லாத சமூகத் தொண்டு பாலைவனத்தை உழுவது போல் பயனின்றிப் போகும். தற்போது உலகத்தில் காணப்படும் வன்முறைச் செயல்களுக்கும், அராஜகத்திற்கும் முக்கிய காரணம் கடவுள் உணர்ச்சியால் வரும் அமைதி யின்மையே என்று கூறலாம். ஆகையால் நம் சமய அடிப்படையில் துவங்கும் பள்ளிகளும் மருத்துவமனைகளும் மிகவும் பயன் அளிக்கும் என்பதிலும் நம் அப்பர் பெருமான் பெயரில் துவக்க இருக்கும் குருகுலப் பள்ளி காலத்திற்கேற்ற பணி என்பதிலும் ஐயமில்லை. தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தொண்டு வாழ்க! வளர்க!!

(23-4-68 அன்று, திருவாமூரில் நடந்த அப்பர் சுவாமிகள் குரு பூஜை விழாவில் நிகழ்த்திய தலைமை உரையின் சுருக்கம்.)

பிற செய்திகள்

அரியலூர் மாணிக்கவாசக மன்றத்தின் வெள்ளிவிழா 30-6-68 முதல் தொடங்கி நிகழ்ந்து வருகின்றது. 30-6-68 காலை அருள்திரு. வித்துவான் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சைவப் பெருநாவலர் அ. நடேச முதலியார் அவர்கள் எட்டாந்திருமுறையும் கம்பராமாயணமும் என்னும் பொருள்பற்றிப் பேசினார். அன்றுமாலை புலவர் சா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் "மணிவாசகர் மணிமொழிகள் பற்றிப் பேசினார். வைத்தீஸ்வரன் கோயில் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் திருநெறிய தமிழ்ப்பாடலின்னிசையும் நிகழ்ந்தது. 2-7-68 முதல் 5-7-68 முடிய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள் நால்வர் சரித்திரங்களை முறையாக விரிவுரையாற்றினார்கள்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் 23 ஆம் ஆண்டு ஆனிமகத் திருமுறை இன்னிசைப் பெருவிழா 29-6-68, 30-6-68, 1-7-68, 2-7-68 நாட்களில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. நான்கு நாட்களிலும் தலவழிபாடு, திருமுறைப் பெருவிழா, திருப்படிவிழா, திருமுறைப் பேரவை ஆகியன மிகச் சிறப்புற நிகழ்ந்தன. மதுரையாதீனம் அருள் திரு சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சிவஞான சுவாமிகள், தவத்திரு அழகர் அடிகள், புலவர் முருகவேள் முதலிய பல பெருமக்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் விழா:— காவேரிப்பாக்கத்தை யடுத்த இராமாபுரத்தில் மாணிக்க வாசக மன்றத்தின் சார்பில மாணிக்கவாசக சுவாமிகளின் ஆனிமகவிழா 30-6-68 ஞாயிறன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்

பெற்றது. இம்முதலாண்டு விழாவினை இந்து அறநிலைய "திருக்கோயில்" திங்களிதழ் ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L. அவர்கள் தொடக்கிவைத்துச் சொற்சொற்பொழிவாற்றினார்கள். அன்று காலை மாணிக்கவாசகர் திருவுருவப்படம் நன்கு அலங்கரிக்கப் பெற்று திருமுறை இன்னிசையுடன் அன்பர்கள் புடை சூழ திருவீதி உலாவந்தது. மாலை 6-30 மணியளவில் 1. திருமுறைச் செல்வர் திரு. இரத்தின சண்முகனார் "மாணிக்கவாசகர் மாட்சி என்பது பற்றியும் 2. திருவண்ணாமலை தவத்திரு பெருமாள் சுவாமி அடிகளார் "பிட்டமுது செய்த பித்தன்" என்பது பற்றியும் 3. வித்துவான் திரு. பி. மா. சோமசுந்தர முதலியார் "செம்பொற்றுளே சார்வான திருமனம்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்ற விழா இனிது நிறைவேறியது.

நம் சமாசத்தோடு நெருங்கிப் பழகிய பேரன்பரும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியருமாகிய திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் திருமகனார் நிறைநாட்செல்வர் மெய்கண்டானுக்கும் கோடம்பாக்கம் திரு. சொ. இராமதாசு அவர்கள் திருமகளார் நிறைநாட் செல்வி சூரியாவுக்கும் 27-6-68 அன்று திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. சமாசச் சார்பில் புதுமணமக்களுக்கு வாழ்த்திதழ் வாசித்தளித்து சமாஜ முன்னாள் செயலாளர் திரு. கொ. நீ. சிங்காரவேல் முதலியார் அவர்கள் வாழ்த்தினார்கள். புதுமணமக்கள் நீடூழி நல்வாழ்வுபெற்று வாழ்க.

நம் சமாச நெடுநாளைய அன்பரும் குமரி மாவட்டத்தில் சமாசப்பணிகளை ஊக்கமுற நடத்தித் தருபவருமாய நாகர் கோயில் C. வள்ளிநாயகம் பிள்ளை B. A., B. L.

திருமகளார் நிறைநாட்செல்வி இலகவதியம்மையாருக்கும் சிவசைலம் திரு. S. N. உலகநாதபிள்ளை திருமகனார் நிறைநாட்செல்வர் சங்கரநாராயணனுக்கும் 27-6-68 ல் திருமணம் நாகர் கோயில் மணமகளில்லத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

புதுமணம் பெற்ற தம்பதிகள் நின்றசொல்லராய் நீடு தோறினியராய் எல்லா நற்பேறுகளுமினிதுற்று என்றும் நன்றுவாழ பரமகல்யாணித்தாயொருபாகம் கொண்ட பரமனின்னிணையடிகளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

ஆடித் திங்கட் சிறப்பு நாள்கள்

5 (20—7—68) கார்த்திகை-மூர்த்தி நாயனார் விழா
do புகழ்ச்சோழ நாயனார் விழா
8 (23—7—68) திருவாதிரை-கூற்றுவ நாயனார் விழா
16 (31—7—68) சித்திரை-பெருமிழலைக்குறும்ப நாயனார் விழா
17 (1—8—68) சுவாதி-சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழா
do do சேரமான் பெருமாள் நாயனார் விழா
28 12—8—68) கேட்டை-கலிய நாயனார் விழா
do do கோட்புலி நாயனார் விழா

மதுரைத் திருவள்ளுவர் கழகம்
சிவஞானபோதச் சொற்பொழிவுகள்

24-5-68 முதல் 4-6-68 முடிய பன்னிரண்டு நாட்களில் காவிரிப்பூம் பட்டினம் மேலையூர் சிவராஜயோக மடத்துத் தலைவர் தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்களால் சிவஞானபோதச் சொற்பொழிவுகள்

நடத்தப்பெற்றன. முதல்நாள் காலையில் ஆலய வழிபாட்டின்பின் சுவாமிகள் 'மெய்கண்டார் வரலாறு' பற்றி விரிவுரை யாற்றினார்கள். மாலையில் திரு. ஜி. கலியாணம் பிள்ளை சுவாமிகளை அறிமுகப்படுத்திவைத்தார். திரு. கி. பழனியப்ப பிள்ளை வரவேற்புரை கூற, திரு. ஔவை துரைசாமிப் பிள்ளை அணிந்துரை வழங்க, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் தருமகர்த்த குழுத்தலைவர் திரு. அ. சிதம்பர முதலியார் தொடக்கவுரை யாற்றினார்கள். சுவாமிகள் சிவஞானபோத முதல் சூத்திரம் பற்றி விரிவுரை செய்தருளினார்கள். பன்னிரண்டு நாட்களிலும் பன்னிரண்டு சூத்திரங்கள் பற்றி முறையாகச் சொற்பொழிவாற்றினார்கள். இடையே ஒருநாள் காஞ்சிபுரம் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும், மற்றொருநாள் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினார்கள். கடைசி நாள் கோயில் நிர்வாக அதிகாரி திரு. சண்முக சுந்தரம், பன்னிரு திருமுறை மன்றம் திரு. வாலசுப்பிரமணிய பிள்ளை, பண்டித திரு. முத்துசுவாமிப் புலவர் முதலியோர் சுவாமிகளின் அருப்பெருந் தொண்டைப் பற்றிச் சிறப்பித்துப் பேசினார்கள். திரு. ஜி. கலியாணம் பிள்ளை நன்றிகூறினார். அன்றிரவு திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களும், அவர்களின் துணைவியார் திருமதி இராதா தியாகராசன் அவர்களும் சுவாமிகளைத் தங்கள் இல்லத்துக்கழைத்து விருந்தளித்து, அளவளாவி மகிழ்ந்தார்கள். பன்னிரண்டு நாட்களிலும் மக்கள் திரளாக வந்து சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரும் பயன்பெற்றனர்.

—:0:—